**பெ.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**வேலூர் மாவட்டம்.**

தொலைபேசி எண் : 0416 - 2252501, 2253512 (அ)
: 2253516, 2252752
: 0416 - 2252345 (த)
: 0416 - 2222000 (இ)
நிகரி : 0416 - 2253034 (அ)
: 0416 - 2228029 (இ)
செல் : 94441 35000
மின்அஞ்சல் : collrvel@nic.in

வாய்மையே வெல்லும்

25 JAN 2023

BS 24/01/23

385

## மாவட்டஆட்சியர் கடிதம்

அன்புள்ள சகோதர சகோதரிகளே,

நம் மாவட்டத்தில் தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர் சிகிச்சையின் பலனாக 46 உள்ளது. இதில் ஏப்ரல் 2022 முதல் டிசம்பர் 2022 வரை 28 புதிய தொழுநோயாளிகளை கண்டறிந்து கூட்டு மருந்துசிகிச்சை அளித்துள்ளோம்.

தொழுநோய் லெப்ராபாக்டிரியா என்ற கிருமியினால் உருவாகிறது. இதுதொற்றுநோய் அல்ல.

இலவசமான சிகிச்சை அனைத்து மருத்துவமனைகளிலும் கிடைக்கிறது.

ஆரம்பநிலையிலேயே தொழுநோயை கண்டுபிடித்தால் ஆறு அல்லது பன்னிரெண்டு மாதங்கள் (6/12) தொடர் சிகிச்சை அளித்து, பூரணமாக குணப்படுத்தி வாழ வைக்கலாம்.

**தொழுநோயின் அறிகுறிகள்:**

1) சிவந்த அல்லது வெளிறிய உணர்ச்சியற்ற தேமல்

2) கை, கால்களில் சதை குறைந்து வறண்ட உணர்ச்சியற்றநிலை

3) எண்ணெய் தடவியது போன்ற தோல்,கண் புருவம் மற்றும் இமைகளில் முடியில்லாது இருத்தல், காதுமடல்களில் சிறுமுடிச்சு போன்ற கட்டிகள் இருத்தல்.

கூட்டு மருந்து சிகிச்சை வழங்குவதன் மூலம் தொழுநோயினை முற்றிலும் குணப்படுத்த முடியும். தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களை உதாசீனப்படுத்தாமல் அரவணைத்து மற்றவர்களைப் போல் இயல்பாய் வாழ உதவுவோம்.

எனவே அனைவரும் 30.01.2023 தொழுநோய் ஒழிப்பு தினநிகழ்ச்சிக்கு ஒத்துழைப்பு கொடுத்து, மேற்கண்ட அறிகுறிகள் உள்ளவர்களை, பொதுசுகாதார ஊழியர்களுக்கு தெரியபடுத்தி தொடர் கூட்டு மருந்து சிகிச்சை வழங்கி, தொழுநோயற்ற சமுதாயம் உருவாக்குவோம்.

23/1/23

மாவட்டஆட்சியர்,
வேலூர் மாவட்டம்.

# ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு உறுதிமொழி

மகாத்மா காந்தி நினைவு தினமான இன்று உறுதிமொழி ஏற்கிறேன். தொழுநோய், மைக்கோ பாக்டீரியம் லெப்ரே என்ற பாக்டீரியா கிருமியினால் காற்றின் மூலம் பரவுகிறது என்பதனை நான் அறிவேன்.

உணர்ச்சியற்ற தேமல், படை போன்ற தோல் நோய் உள்ளவர்களையோ அல்லது தொழுநோயினால் உடல் குறைபாடு உள்ளவர்களையோ எனது குடும்பத்திலோ அல்லது வீட்டின் அருகிலோ இருந்தால் உடன் அவர்களை அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அல்லது அரசு மருத்துவமனைகளுக்கு அழைத்துச் சென்று சிகிச்சை எடுக்க ஏற்பாடு செய்வேன்.

அவர்களை அன்பாகவும் எனது குடும்ப உறுப்பினர்கள் போலவும் வேறுபாடு இல்லாமல் உரிய மரியாதையுடன் நடத்துவேன்.

தொழுநோய் முற்றிலும் குணமாகக் கூடியது. ஆரம்ப நிலை சிகிச்சை உடல் குறைபாட்டை ஏற்படுத்தாதது.

தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை ஒதுக்கக்கூடாது போன்ற விபரங்களை அண்டை அயலாருக்குத் தெரிவித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துவேன்.

தேசப்பிதா மகாத்மா காந்தியின் கனவை நனவாக்கும் வகையில் தொழுநோய் இல்லாத இந்தியா உருவாக அனைவருடன் இணைந்து ஒத்துழைப்பேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்.